# க.பொ.த (உயர்தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

**விவசாய விஞ்ஞானம் I** | **இரண்டு மணித்தியாலங்கள்**

**அறிவுறுத்தல்கள்:**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
* விடைத்தாளின் பின்புறத்திலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து பின்பற்றுக.
* 1 - 50 வரையான ஒவ்வொரு வினாவின் கீழும் (1), (2), (3), (4), (5) எனத் தரப்பட்டுள்ள விடைகளுள் **மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் புள்ளடியிட்டுக் காட்டுக.

**01.** இலங்கையில் தாவரத் தடுப்பு (மண்டபப்படுத்தல்) மத்திய நிலையம் அமைந்திருப்பது,
(1) கண்ணொருவவிலாகும். (2) மாத்தளையிலாகும். (3) அம்பலாந்தோட்டையிலாகும்.
(4) உடவளவையிலாகும். (5) கட்டுநாயக்கவிலாகும்.

**02.** மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களை **மட்டும்** கொண்ட தொகுதி,
(1) பொல்கொல்லை, கல்லோயா, உடவளவை
(2) ரன்தம்பே, போவத்தன்னை, விக்டோரியா
(3) விக்டோரியா, உடவளவை, லுணுகம்வெகெர
(4) இங்கினிமிட்டிய, ரன்தெனிகல, கல்லோயா
(5) உடவளவை, கொத்மலை, ரன்தம்பே

**03.** தவரங்களினால் மண்ணிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அடிப்படைப் போசணைப் பதார்த்தங்கள் மூன்றுமாவன,
(1) காபன், ஒட்சிசன், ஐதரசன்
(2) நைதரசன், காபன், ஒட்சிசன்
(3) பொசுபரசு, நைதரசன், பொட்டாசியம்
(4) போரன், நாகம், மங்கனீசு
(5) ஆசனிக்கு, கட்மியம், ஈயம்

**04.** இயற்கைப் பதியமுறை இனப்பெருக்க அமைப்பான தண்டுமுகிழுக்கு உதாரணமாக அமைவன;
(1) ஹிங்குரலவும் உருளைக்கிழங்கும் (2) சேம்பும் இன்னலவும்
(3) வற்றாளையும் அரோட்டுக் கிழங்கும் (4) உருளைக்கிழங்கும் அரோட்டுக் கிழங்கும்
(5) இன்னலவும் உருளைக்கிழங்கும்

**05.** ஒளித்தொகுப்புக்கு அவசியமாக அமையும் கட்புலனாகு நிறம்;
(1) கருநீலமாகும். (2) நீலமாகும். (3) பச்சையாகும். (4) மஞ்சளாகும். (5) ஊதாவாகும்.

**06.** பண்ணை விலங்குகளின் போசணைக்கெனப் பயன்படுத்தக் கூடிய நிரப்பு உணவுக்கான உதாரணமாக அமைவது,
(1) அரிசித்தவிடு (2) இறுங்கு (3) தேங்காய்ப்பிண்ணாக்கு
(4) சோளம் (5) சுறா எண்ணெய்

**07.** இலங்கையின் தலா நபர் கோழியிறைச்சி நுகர்வு அண்ணளவாக,
(1) 1 kg (2) 2 kg (3) 3 kg (4) 4 kg (5) 5 kg

**08.** இலங்கையில் காணப்படும், நெற்செய்கைக்கு மிக உகந்த மண் வகை;
(1) செங்கபில மண் (2) அலூவியல் மண் (3) ரெகசோல் மண்
(4) சிவப்பு இலற்றசோல் மண் (5) செம்மஞ்சள் பொட்சோல் மண்

**09.** உணவின் தரத்தை மேம்படுத்துவதற்கென உணவுச் சேர்மானங்கள் சேர்க்கப்படும். அவ்வாறான சேர்மானப் பதார்த்தங்களுக்கு உதாரணமாக அமைவது;
(1) இனிப்புச் சுவையூட்டி (2) உப்பு (3) மதுவம்
(4) விற்றமின் (5) ஆரம்பிப்பு உறை

**10.** கோழிவளர்ப்பின்போது பல்வேறு கோழி வர்க்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இறைச்சிக்கென வளர்க்கப்படும் கோழி வர்க்கம்;
(1) RIR ஆகும். (2) இந்தியன் கேம் ஆகும். (3) ஒஸ்ரலோப் ஆகும்.
(4) கொச்சின் ஆகும். (5) வென்கொப் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க.

**11.** மாடுகளுக்கு ஏற்படும் உண்ணிக் காய்ச்சலுக்குக் காரணமான நோய்க்காரணி;
(1) புரட்டோசோவாவாகும். (2) உண்ணியாகும். (3) பற்றீரியாவாகும்.
(4) அமீபாவாகும். (5) நெமற்றோடாகும்.

**12.** அடைவைப்பதற்குப் பொருத்தமான முட்டையில் காணப்படவேண்டிய இயல்பு;
(1) வடிவச்சுட்டி 55-65% ஆகக் காணப்படல். (2) நிறை 60-65 g ஆகக் காணப்படல்.
(3) களஞ்சிய காலம் 10-14 நாட்களாகக் காணப்படல். (4) முட்டையோடு அதிக தடிப்பாகக் காணப்படல்.
(5) காற்றறை சிறியதாகக் காணப்படல்.

**13.** பின்வருவன மண் கூழ்நிலைத் துணிக்கைகள் தொடர்பான சில கூற்றுகள் ஆகும்.
A - மண்ணிலுள்ள கூழ்நிலைத் துணிக்கைகளில் அதிகமானவை அசேதனத் துணிக்கைகளாகும்.
B - சேதனக் கூழ்நிலைத் துணிக்கைகள் திட்டமான வடிவத்தைக் கொண்டிருப்பதில்லை.
C - சேதனக் கூழ்நிலைத் துணிக்கைகள் நீரில் கரையாதபோதும் காரக்கரைசலில் கரையும்.
D - சேதனக் கூழ்நிலைத் துணிக்கைகளின் கற்றயன் பரிமாற்றக் கொள்ளளவு, சேதனக் கூழ்நிலைத் துணிக்கைகளின் கற்றயன் பரிமாற்றக் கொள்ளளவை விட அதிகமாகும்.
இக் கூற்றுகளில் சரியானவை;
(1) A, B ஆகியன மட்டும் (2) A, B, C ஆகியன மட்டும் (3) A, B, D ஆகியன மட்டும்
(4) A, C, D ஆகியன மட்டும் (5) B, C, D ஆகியன மட்டும்

**14.** மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறையான மிதப்பு வளர்ப்பில் செய்கைபண்ண உகந்த பயிர்;
(1) உருளைக் கிழங்கு (2) குட மிளகாய் (பெல் பெப்பர்) (3) வல்லாரை
(4) லீக்ஸ் (5) தக்காளி

**15.** பின்வருவன வித்துக்களின் முளைதிறனைச் சோதிக்கப் பயன்படுத்தப்படும் ரெற்றாசோலியம் குளோரைட்டு தொடர்பான சில கூற்றுகள் ஆகும்.
A - இது சிவப்பு நிறத் திரவமாகும்.
B - உயிருள்ள வித்துக்களில் மட்டும் தொழிற்பட்டு போமசான் சிவப்பு நிறத்தை ஏற்படுத்தும்.
C - ஒளி புகவிடக்கூடிய கண்ணாடிப் போத்தல்களில் இதனைக் களஞ்சியப்படுத்த வேண்டும்.

இவற்றுள் சரியான கூற்று/ கூற்றுகள்;
(1) A மட்டும் (2) B மட்டும் (3) A, B மட்டும்
(4) A, C மட்டும் (5) B, C மட்டும்

**16.** நுண் இனப்பெருக்கச் செயன்முறையின் ஒழுங்குமுறை
(1) தாவரப் பாகங்களைப் பெறுதல் ⟶ போசணை ஊடகத்தில் இடல் ⟶ அங்குரப் பெருக்கம் ⟶ வேர்விடச்செய்தல் ⟶ புறச்சூழலுக்கு இசைவாக்கல்
(2) தாவரப் பாகங்களைப் பெறுதல் ⟶ அங்குரப் பெருக்கம் ⟶ போசணை ஊடகத்தில் இடல் ⟶ வேர்விடச்செய்தல் ⟶ புறச்சூழலுக்கு இசைவாக்கல்
(3) அங்குரப் பெருக்கம் ⟶ தாவரப் பாகங்களைப் பெறுதல் ⟶ போசணை ஊடகத்தில் இடல் ⟶ வேர்விடச்செய்தல் ⟶ புறச்சூழலுக்கு இசைவாக்கல்
(4) அங்குரப் பெருக்கம் ⟶ வேர்விடச்செய்தல் ⟶ தாவரப் பாகங்களைப் பெறுதல் ⟶ போசணை ஊடகத்தில் இடல் ⟶ புறச்சூழலுக்கு இசைவாக்கல்
(5) அங்குரப் பெருக்கம் ⟶ வேர்விடச்செய்தல் ⟶ போசணை ஊடகத்தில் இடல் ⟶ தாவரப் பாகங்களைப் பெறுதல் ⟶ புறச்சூழலுக்கு இசைவாக்கல்

**17.** "தாவர ஒட்டுதல்" தொடர்பான சரியான கூற்றாக அமைவது;
(1) உச்சியொட்டியின்போது ஒட்டுக்கிளை, ஒட்டுக்கட்டை ஆகியவற்றின் தடிப்புகள் சமனாக இருக்க வேண்டும்.
(2) வில்லொட்டு தாவரங்களைப் புனரமைப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.
(3) இளநிலை ஒட்டுக்கு பென்சில் தடிப்பான ஒட்டுக்கட்டை அவசியமாகும்.
(4) ஆப்பொட்டுக்கு தனி அரும்பு கொண்ட பட்டைத்துண்டு பயன்படுத்தப்படும்.
(5) ஒட்டுப்பொருத்து மேலிருந்து கீழாக ஒட்டுநாடாவால் சுற்றிக் கட்டப்படும்.

**18.** இலங்கையின் பிரதான உணவுப் பயிர் அடங்கும் தாவரக் குடும்பம்;
(1) Fabaceae (2) Crucifereceae (3) Palmae
(4) Poaceae (5) Solanaceae

**19.** இலங்கையில் அதிகளவு மாடுகள் காணப்படுவது,
(1) மலைநாட்டு வலயத்திலாகும். (2) இடைநாட்டு வலயத்திலாகும்.
(3) தாழ்நாட்டு ஈர வலயத்திலாகும். (4) உலர் வலயத்திலாகும்.
(5) தென்னை முக்கோணத்திலாகும்.

[பக். 3 ஐப் பார்க்க.

**20.** பின்வருவன கோழிகளில் நடைபெறும் உணவுச் சமிபாடு மற்றும் உணவு அகத்துறிஞ்சல் ஆகியன தொடர்பான சில கூற்றுகள் ஆகும்.

A - கோழியின் உமிழ்நீரிலுள்ள அமிலேசு நொதியம் மூலமாக கண்டப்பையில் உணவு சிறிதளவில் சமிபாடடையும்.

B - கோழியின் உணவுச் சமிபாட்டுத் தொகுதியில் லக்ரேசு நொதியம் **காணப்படுவதில்லை.**

C - பிரதானமாக இரசாயனச் சமிபாடு முன்னிரைப்பையிலும் முற்சிறுகுடலிலும் நடைபெறும்

D - அரைப்புப்பையில் சிறிதளவு நுண்ணுயிர்ச் சமிபாடு நடைபெறும்.

இக் கூற்றுகளுள் மிகச் சரியானவை,

(1) A, B, C ஆகியன மட்டும். (2) A, B, D ஆகியன மட்டும். (3) A, C, D ஆகியன மட்டும்.
(4) B, C, D ஆகியன மட்டும். (5) A, B, C, D ஆகிய நான்கும்.

**21.** புரொயிலர்க் கோழி வளர்ப்புத் தொடர்பான உண்மையான கூற்று எது?

(1) புரொய்லர்க் கோழிகளின் உணவு மாற்றீட்டு வீதம் 2 இலும் அதிகமாயின் கிடைக்கும் இலாபமும் அதிகரிக்கும்.
(2) உணவுப் பங்கீட்டை தூள் வடிவில் அளிப்பதன் மூலம் வீண் விரயத்தைக் குறைக்க முடியும்.
(3) ஆரம்பத் தீன் கலவையை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்குவதால் தேவையற்ற விதத்தில் கோழிகள் கொழுப்பதைத் தடுக்கலாம்.
(4) புரொயிலர்க் கோழிகளைக் கொல்வதற்கு 8 - 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் உணவு வழங்குவதை நிறுத்துவதன் மூலம் இறைச்சி அசுத்தமடைவதைத் தவிர்க்க முடியும்.
(5) கனகூள முறையில் புரொயிலர்க் கோழிகளை வளர்க்கும்போது இடையிடையே கனகூளம் மாற்றப்பட வேண்டும்.

**22.** நுண் நீர்ப்பாசனம் எனப்படுவது;

(1) புவியீர்ப்பின் மூலம் திறந்த பாய்ச்சலாகும் மூலமாக நீரை வழங்குதல்.
(2) மண்ணின் கீழே புதைக்கப்பட்ட நுண்துளைகள் கொண்ட குழாய்கள் மூலம் நீரை வழங்குதலாகும்.
(3) தரைக்கு மேலே பொருத்தப்பட்ட தூவல் தலைகள் மூலம் அமுக்கப்பட்ட நீரை தெளித்தலாகும்.
(4) சால்கள் மூலமாக மிக சொற்ப நீரை மண்ணுக்கு வழங்குதலாகும்.
(5) களத்தை வரம்புகள் மூலமாக நிரல்களாக பிரித்து அதனூடே நீரை வழங்கலாகும்.

**23.** பின்வருவன நிலக்கீழ் நீர்நிலைகள் பற்றிய சில கூற்றுகளுள் ஆகும்.

A - பொதுவான கிணற்றிலுள்ள நீர் ஆட்டீசியன் நீரேந்தியிலுள்ள நீராகும்.

B - ஆட்டீசியன் நீரேந்திகளின் முகடுகள் மலைநாட்டு நீர்த்தேக்கங்களை அண்டிய பிரதேசங்களில் காணப்படும்.

C - விவசாயக் கிணறுகளில் ஆட்டீசியன் நீரேந்தியிலுள்ள நீரே உள்ளது.

D - ஆட்டீசியன் நீரேந்தியில் ஊடுபுகவிடாத இரண்டு கற்பாரப் படுக்கைகளுக்கிடையில் அமுக்கத்துடன் கூடிய நீர் காணப்படும்.

இக்கூற்றுக்களுள் மிகச் சரியானவை;

(1) A, B ஆகியன மட்டும். (2) B, C ஆகியன மட்டும். (3) B, D ஆகியன மட்டும்.
(4) A, C, D ஆகியன மட்டும். (5) B, C, D ஆகியன மட்டும்.

**24.** தாவர ஓமோன்களின் தொழிற்பாடு தொடர்பான சரியான கூற்று எது?

(1) சைற்றோனின்களின் இலையுதிர்வைத் தூண்டும்.
(2) ஜிபரலின் தாவரங்கள் குறளாதலைத் தூண்டும்.
(3) அப்சிசிக்கமிலம் வித்துக்களின் முளைத்தலைத் தூண்டும்.
(4) ஒட்சின் கக்கவரும்பின் வளர்ச்சியைத் தூண்டும்.
(5) எதிலீன் அன்னாசியில் பூக்கள் உண்டாவதைத் தூண்டும்.

**25.** விவசாயச் சூழலியல் வலய வகைப்படுத்தல் தொடர்பான உண்மையான கூற்று எது?

(1) நவீன வகைப்படுத்தலுக்கமைய 48 விவசாய சூழலியல் வலயங்கள் உள்ளன.
(2) எல்லா விவசாய சூழலியல் வலயங்களும் இரண்டு ஆங்கில பேரெழுத்துக்களினால் வகைகுறிக்கப்படும்.
(3) விவசாய சூழலியல் வலய வகைக்குறிப்பில் இலக்கத்தின் மூலம் மழைவீழ்ச்சிப் பரம்பல் காட்டப்படும்.
(4) விவசாய சூழலியல் வலய வகைக்குறிப்பில் ஆங்கில எழுத்து மூலம் வெப்பநிலை குறித்துக் காட்டப்படும்.
(5) அதிக எண்ணிக்கையிலான விவசாயச் சூழலியல் வலயங்கள் உலர்வலயத்தில் உள்ளன.

**26.** பின்வருவனவற்றுள் தீப்பாறைக்கான உதாரணமாக அமைவது எது?

(1) சாணொக்கைற்று (2) டொலமைற்று (3) சிலேற்று
(4) நைஸ் (5) மணற்கல்

**27.** பின்வருவன நீருயர்த்தல் பற்றிய சில கூற்றுகள் ஆகும்.

A - மையநீக்க விசைப் பம்பி மூலமாக சேறு, கழிவுகள் கலந்த நீரையும் பம்ப முடியும்.

B - மாறா இட்பெயர்ச்சிப் பம்பி மூலம் ஒவ்வொரு அடிப்பின்போதும் வெளியேற்றப்படும் நீரின் அளவு மாறாது.

C - நீர்ச்சில்லை தொழிற்படச் செய்ய சிறிய மோட்டார் பயன்படுத்தப்படும்.

D - சிறிய நீரோடைகளிலிருந்து பயிர்செய் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு கமலை பயன்படுத்தப்படும்.


இக் கூற்றுகளுள் சரியானவை,


(1) C, D ஆகியன மட்டும். (2) A, B, C ஆகியன மட்டும். (3) A, B, D ஆகியன மட்டும்.
(4) A, C, D ஆகியன மட்டும். (5) B, C, D ஆகியன மட்டும்.


[பக். 4 ஐப் பார்க்க.


**28.** நான்கு ஹெக்டயர் நிலப்பரப்பில் ஹெக்டயருக்கு 40 000 செடிகள் வீதம் கொண்ட வெண்டிச் செய்கையைத் தாபிக்க நிறுவனமொன்று உத்தேசித்துள்ளது. வித்துக்களின் இறப்பு வீதம் 8% ஆயின் நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட வேண்டிய வெண்டி வித்துக்களின் எண்ணிக்கை,
(1) 12 800 ஆகும். (2) 43 200 ஆகும். (3) 43 478 ஆகும்.
(4) 172 800 ஆகும். (5) 173 913 ஆகும்.


- **இல 29, 30 ஆகிய வினாக்கள் பின்வரும் வரைபுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.**


A


B


C


D


E


**29.** மண்வளி, மண்ணீர் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டும் வரைபு,
(1) A (2) B (3) C (4) D (5) E

**30.** ஆவியுயிர்ப்பு வீதம், ஒளிச்செறிவு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டும் வரைபு,
(1) A (2) B (3) C (4) D (5) E

**31.** ஜிப்சத்தில் அடங்கியுள்ள இரண்டு மூலகங்களுமாவன,
(1) கல்சியமும் மக்னீசியமும்
(2) சோடியமும், கந்தகமும்
(3) காபனும், கல்சியமும்
(4) காபனும் மக்னீசியமும்
(5) கல்சியமும் கந்தகமும்

**32.** விவசாயியொருவர் தனது வயலில் காணப்பட்ட மண்ணின் இழையமைப்பை உருளையாக்கல் முறையில் சோதித்தபோது பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன.

உருளையின் தன்மை 

மோதிரத்தின் தன்மை 

இவ்விவசாயிக்கு; இந்த நிலத்தில் செய்கை பண்ணவென சிபாரிசு செய்யக்கூடிய பயிர் யாது?
(1) தென்னை (2) நெல் (3) பப்பாசி
(4) வாழை (5) உருளைக்கிழங்கு

**33.** பின்வருவன பசளைப் பயன்பாட்டு வினைத்திறன் தொடர்பான சில கூற்றுகள் ஆகும்.
A - மென்மையான, குறுகிய வேர்கள் கொண்ட, குறுகிய காலப் பயிர்களின் பசளைப் பயன்பாட்டு வினைத்திறன் அதிகமாகும்.
B - மண்ணின் ஈரலிப்பு வயற்கொள்ளளவு நிலையில் உள்ளபோது பசளைப் பயன்பாட்டு வினைத்திறனும் உச்சமாகும்.
C - நீர்வடிப்புக் குறைவான மண்ணுக்கு நைத்திரேற்றுப் பசளைகளை இட்டால் பசளைப் பயன்பாட்டு வினைத்திறன் அதிகரிக்கும்.

இவற்றுள் சரியான கூற்று / கூற்றுக்கள்
(1) A மட்டும். (2) B மட்டும். (3) C மட்டும்.
(4) A, B ஆகியன மட்டும் (5) B, C ஆகியன மட்டும்

[பக். 5 ஐப் பார்க்க.

**34.** பின்வருவன காலநிலை அலகில் மழைமானியை நிறுவுவது பற்றிய சில கூற்றுகள் ஆகும்.
A - விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கொங்கிரீட்டு மேடையின் மீது நிறுவப்பட வேண்டும்.
B - மழைமானியின் வாய் நிலமட்டத்திலிருந்து 30 cm உயரத்தில் உள்ளவாறு நிறுவப்பட வேண்டும்.
C - ஆவியாதல் தட்டிலிருந்து 5 m தூரத்தில் நிறுவப்பட வேண்டும்.
D - புறத் தடைகளின் உயரத்தைப்போல் மூன்று மடங்கு தூரத்தில் நிறுவப்பட வேண்டும்.

மேலே தரப்பட்ட கூற்றுகளுள் சரியானவை;
(1) A, B ஆகியன மட்டும் (2) A, B, C ஆகியன மட்டும் (3) A, B, D ஆகியன மட்டும்
(4) A, C, D ஆகியன மட்டும் (5) B, C, D ஆகியன மட்டும்

**35.** அத்தியாவசிய உணவுப்பொருட்கள்,
(1) பூரண நெகிழ்ச்சியுறா கேள்வியைக் கொண்டவையாகும். (2) நெகிழ்ச்சியுறா கேள்வியைக் கொண்டவையாகும்.
(3) அலகு நெகிழ்ச்சி கேள்வியைக் கொண்டவையாகும். (4) நெகிழ்ச்சி கேள்வியைக் கொண்டவையாகும்.
(5) பூரண நெகிழ்ச்சி கேள்வியைக் கொண்டவையாகும்.

**36.** சிலருரிமைச் (oligopoly) சந்தையில் காணத்தக்க இயல்பானது,
(1) எல்லாப் பண்டங்களும் சேவைகளும் ஓரினமானவை.
(2) நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் அதிக அளவில் சந்தையில் காணப்படல்.
(3) போட்டி விலை அல்லாத சந்தைப்படுத்தல் மேம்பாட்டை அதிகரிக்க முயலுதல்.
(4) வழங்குநரிடையே பரஸ்பர இடைத்தொடர்புகள் அற்றிருத்தல்.
(5) திறந்த பிரவேசமின்மை.

**37.** நிரம்பல் வளையி வலப்பக்கமாகப் பெயர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி;
(1) உற்பத்தி நுட்பமுறைகளில் சிக்கல் ஏற்படல்.
(2) கைத்தொழிலில் நிச்சயமற்ற தன்மை ஏற்படல்.
(3) உற்பத்திக் காரணிகளின் விலை குறைவடைதல்.
(4) மூலப்பொருட்களுக்கான தீர்வை வரி அதிகரித்தல்.
(5) மானியங்கள் குறைக்கப்படல்.

**38.** நெற்செய்கையின்போது **மட்டும்** பயன்படுத்தப்படுவதும் மண் பயன்படுத்தப்படாததுமான நாற்றுமேடை வகை
(1) தாழ் நாற்றுமேடை (2) நொரிடொகே நாற்றுமேடை (3) சுருள் நாற்றுமேடை
(4) டபொக் நாற்றுமேடை (5) சேற்று நாற்றுமேடை

- **வினா இல 39 - 41 வரையானவை பின்வரும் விவசாய இரசாயனங்களின் சேர்மானத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.**
A - மீதைல் இயூஜினோல்
B - மெற்றால்டிகைட்
C - பைரேதிரின்
D - காபோபியூரான்
E - மலத்தியன்

**39.** நத்தைகளைக் கட்டுப்படுத்த இரையாகப் பயன்படுத்தக் கூடியது,
(1) A (2) B (3) C (4) D (5) E

**40.** தாவரங்களில் காணப்படும் இயற்கையான பூச்சிநாசினியானது,
(1) A (2) B (3) C (4) D (5) E

**41.** குறுணல் வடிவிலான பூச்சிநாசினி,
(1) A (2) B (3) C (4) D (5) E

**42.** கோழியின் உணவுக்கால்வாய்த் தொகுதி தொடர்பான சரியான கூற்று;
(1) வாய்க்குழியில் பற்களும் உமிழ்நீர்ச் சுரப்பிகளும் அமைந்துள்ளன.
(2) கோழிகள் அலகைக் கொண்டுள்ளபோதும் நாக்கைக் கொண்டிருப்பதில்லை.
(3) அரைப்புப்பை, முன் இரைப்பை ஆகியவற்றுக்கிடையில் கண்டப்பை காணப்படும்.
(4) கழிவறை உணவுக்கால்வாய், கழிவகற்றல், இனப்பெருக்கத் தொகுதிகள் திறக்கும் பொதுவான அறையாகும்.
(5) பெருக்குடல் சற்று தடிப்பான, குறுகிய அமைப்பாக அமைவதுடன் அது குதத்தில் முடிவடையும்.

**43.** 15 வயதுடைய பெண்பிள்ளையொருவரின் நிறை 45 kg உம் உயரம் 1.5 m உம் ஆகும். இவரின் உடற்றிணிவுக் குறிகாட்டி (BMI);
(1) 03 ஆகும். (2) 20 ஆகும். (3) 22.5 ஆகும். (4) 30 ஆகும். (5) 68 ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க.

**44.** குறிப்பிட்ட தாவரமொன்றின் உயரத்துக்குரிய இயல்பு T இனாலும் குட்டைக்குரிய இயல்பு t இனாலும் வகைகுறிக்கப்படும். T ஆட்சியுடையதாகும். பல்லினப் பிறப்புரிமை அமைப்புக் கொண்ட உயரமான தாவரம் குட்டையான தாவரத்துடன் இனங்கலப்புச் செய்யப்பட்டபோது கிடைக்கும் எச்சங்களின் உயரம் : குட்டை விகிதமானது;
(1) 1:1 ஆகும். (2) 2:1 ஆகும். (3) 3:1 ஆகும். (4) 3:2 ஆகும். (5) 9:7 ஆகும்.

**45.** குறிப்பிட்ட பூச்சியொன்று பூரண உருமாற்றத்தைக் கொண்டிருப்பதுடன் இரண்டு சோடிச் சிறகுகளையும் கொண்டிருந்தது. பறக்கும்போது செட்டைகள் தனியலகாகத் தொழிற்படும். வயிற்றில் மெல்லிய வட்டமொன்று உள்ளது. இந்த பூச்சி அடங்கும் வருணமானது;
(1) Lepidoptera (2) Coleoptera (3) Diptera
(4) Orthoptera (5) Hymenoptera

**46.** பின்வருவன களைகள் தமது நிலவுகையை உறுதிப்படுத்தவென கொண்டுள்ள சில இசைவாக்கங்கள் ஆகும்.
A - தகாத காலத்தைச் சகித்து வாழும் ஆற்றல்.
B - நீண்ட வாழ்க்கைவட்ட காலத்தைக் கொண்டிருத்தல்.
C - அனேக எண்ணிக்கையான வித்துக்களை உருவாக்குதல்.
D - வினைத்திறனான வித்து பரம்பல் முறையைக் கொண்டிருத்தல்.

இவற்றுள் சரியானவை
(1) B, C ஆகியன மட்டும். (2) C, D ஆகியன மட்டும். (3) A,B, C ஆகியன மட்டும்.
(4) A,C, D ஆகியன மட்டும். (5) B,C, D ஆகியன மட்டும்.

**47.** மூலக்கற்றயன்களை 15 cmol/kg என்ற அளவில் கொண்டுள்ள குறிப்பிட்ட மண்ணொன்றின் உப்புமூல நிரம்பல் சதவீதம் 75% ஆகும். இம் மண்ணின் அமிலக் காரணிக் கற்றயன்களின் அளவு,
(1) 5 cmol/kg ஆகும். (2) 20 cmol/kg ஆகும். (3) 35 cmol/kg ஆகும்.
(4) 60 cmol/kg ஆகும். (5) 90 cmol/kgஆகும்.

**48.** நெல்லை அவிப்பதனால் ஏற்படும் விளைவு,
(1) தானியத்தின் உமியை அகற்றுதல் கடினமாதல்.
(2) தானிய வித்துகள் உடையும் அளவு அதிகரிக்கும்.
(3) இலைப்பேசு நோதியம் அழிவடையும்.
(4) சமைத்த சோறு பழுதடையும்.
(5) புரதம், கனிப்பொருட்கள் ஆகியன இழக்கப்படும்.

**49.** பாதுகாப்பு இல்லங்கள் தொடர்பான உண்மையான கூற்று
(1) பொலித்தீனின் மீது அல்காக்கள் வளர்வதால் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பொலித்தீன் மாற்றப்பட வேண்டும்.
(2) பொலித்தீன் கூடாரங்களில் பூச்சித்தடை வலையை பயன்படுத்துவதனால் இல்லங்களில் நிலவும் வெப்பநிலையைக் குறைக்கலாம்.
(3) ஈரப்பதனைக் கட்டப்படுத்துவதே வலையிடப்பட்ட இல்லங்களின் அடிப்படையாகும்.
(4) இலங்கையில் வெட்டு மலர்ச் செய்கைக்கென பசுமை இல்லங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படும்.
(5) சலாகை (லத்) இல்லங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதனால் பூச்சி பீடைக் கட்டுப்பாட்டை மிக வெற்றிகரமாக மேற்கொள்ளலாம்.

**50.** பின்வருவன மரபு ரீதியான சேனைப் பயிர்ச்செய்கை தொடர்பான சில கூற்றுகளாகும்.
A - சேனைப் பயிர்ச்செய்கையில் சேதனப்பசளை பயன்படுத்தப்படும்.
B - மழைநீரை மட்டும் நம்பிச் செய்யும் பயிர்ச்செய்கையாகும்.
C - ஒக்டோபர் மாதத்தில் சேனை தயார் செய்யப்படும்.
D - சேனைப் பயிர்ச்செய்கையின்போது கலப்புப் பயிர்ச்செய்கை முறை பின்பற்றப்படும்.

இவற்றுள் சரியான கூற்றுகள்,
(1) A, B ஆகியன மட்டும். (2) B, D ஆகியன மட்டும். (3) A,B, C ஆகியன மட்டும்.
(4) A,C, D ஆகியன மட்டும். (5) B,C, D ஆகியன மட்டும்.

***


# க.பொ.த (உயர்தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

| விவசாய விஞ்ஞானம் II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|

**பகுதி A - அமைப்புக் கட்டுரை**

**எல்லா** வினாக்களுக்கும் இப்பத்திரத்திலேயே விடையளிக்க
(ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.)

**01.** A. விவசாயக் காலநிலை அலகில் நிறுவப்பட்டுள்ள சில உபகரணங்கள் / கட்டமைப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன. வினா இல. (i), (ii) ஆகியவற்றுக்கு விடையளிக்க இவற்றைப் பயன்படுத்துக.


A


B


C

(i) மேலே A, B, C எனக் காட்டப்பட்டுள்ள வரிபடங்களைப் பெயரிடுக.

A .....................................................

B .....................................................

C .....................................................

(ii) விவசாயக் காலநிலை அலகில் C எனக் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு காணப்படுவதன் முக்கியத்துவம் யாது?

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

(iii) நாளாந்த வானிலைத் தரவுகளை வெளியிடும்போது பயன்படுத்தப்படாததும் விவசாயக் காலநிலை அலகில் கட்டாயமாகக் காணப்பட வேண்டியதுமான உபகரணங்களைக் குறிப்பிடுக.

..................................................................................................................................................................

(iv) குறிப்பிட்ட பிரதேசத்தின் மழைவீழ்ச்சியை அளவிடவென வைக்கப்பட்ட, 7cm முகப்பு ஆரை கொண்ட மழைமானியில் $770cm^3$ நீர் சேகரிக்கப்பட்டதெனின் அவ்விடத்தின் மழைவீழ்ச்சிப் பெறுமானம் யாது?

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

B. விவசாய விஞ்ஞான ஆசிரியரொருவர் தன்னுடைய மாணவருக்கு $125cm^3$ கனவளவும் 100g நிறையும் கொண்ட இரண்டு பக்கமும் திறந்த நிலையிலுள்ள உருளையை (cylinder) வழங்கி அதனைப் பயன்படுத்தி வயலிலிருந்து மண் மாதிரியைப் பெற்று அவதானிக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கினார்.

(i) மாணவரொருவர் அந்த மண் செங்கபில நிறமானது எனக் கூறினார்.

a. அம் மண்மாதிரி சிவப்பு நிறத்தைக் கொண்டிருப்பதற்கான காரணம் யாது?


..................................................................................................................................................................

b. மண் மாதிரியின் நிறத்தைத் துல்லியமாக தீர்மானிப்பது எவ்வாறு?

..................................................................................................................................................................

[பக். 2 ஐப் பார்க்க.

பெறப்பட்ட மண்மாதிரி பின்வருமாறு மூன்று நாட்கள் வைக்கப்பட்டது.




பின்னர், ஆசிரியரின் அறிவுறுத்தலுக்கமைய பின்வரும் வாசிப்புகள் பெறப்பட்டன.

மூன்று நாட்களின் பின் நீரால் நிரம்பிய மண் மாதிரியின் நிறை = 400 g

அடுப்பில் உலர்த்திய பின்னர் அந்த மண் மாதிரியின் நிறை = 300 g

(ii) மேற்குறிப்பிட்ட பரிசோதனை ஒழுங்கமைப்பில் பொலித்தின் மூடி இடப்பட்டதன் காரணம் யாது?

..........

(iii) இம் மண்மாதிரி வயற்கொள்ளளவு நிலையில் இருக்கும்போது அதில் காணப்படும் நீர்ச் சதவீதத்தைக் கணிக்க.

..........

..........

..........

..........

(iv) இம் மண்ணின் தோற்றவடர்த்தியைக் கணிக்க.

..........

..........

..........

..........

(v) இம் மண்ணின் உண்மையடர்த்தி $2.4 g/cm^3$ எனின், அதன் நுண்டுளைமை எவ்வளவு?

..........

..........

..........

..........

(C) விவசாயிகள் வித்து உற்பத்திச் செயன்முறையில் ஈடுபடும்போது வித்துக்களில் உறங்குநிலை காணப்படுவது அவர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினையாகும்.

(i) வித்து உறங்குநிலை என்றால் என்ன?

..........

..........

(ii) வித்து உறங்குநிலையின் விதங்கள் **இரண்டும்** யாவை?

a. .......... b. ..........

(iii) பின்வரும் வித்துகளின் உறங்குநிலையை நீக்கும் முறை ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

a. தக்காளி -..........

b. சிறகவரை -..........

(D) Bg 360 எனப்படுவது ‘கீரிசம்பா’ என அழைக்கப்படும் தரமான வெள்ளைச் சம்பா நெல் வர்க்கமாகும்.

(i) இந்த நெற்பேத்தை உருவாக்கிய இனவிருத்தி நிலையம் யாது?

..........

(ii) இந்த நெற்பேத்தை பயிரிடப்படின் அறுவடைக்கு எவ்வளவு காலம் செல்லும்?

..........

(iii) நெற்தாவரத்தின் பின்வரும் வளர்ச்சி அவத்தைகளுக்குரிய காலப்பகுதிகளைக் குறிப்பிடுக.

| | காலப்பகுதி |
|---|---|
| a. இனப்பெருக்கப் பருவம் | .......... |
| b. முதிர்ச்சிப் பருவம் | .......... |

[ பக். 3 ஐப் பார்க்க.

(iv) மூன்று வார வயதுடைய நெற் தாவரங்களின் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாகி ஏனைய வயல்களுடன் ஒப்பிடுபோது இளம்பச்சை நிறமாகவும் காட்சியளித்தது. இந்த நெற்தாவரங்களில் காணப்பட்ட மட்டங்களின் எண்ணிக்கையும் குறைவாகக் காணப்பட்டது.

a. எந்த போசணை குறைபாடு காரணமாக மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் தென்பட்டன?

..........................................................................................

b. இந்த குறைபாட்டை நீக்குவதற்கெனப் பயன்படுத்தத்தக்க இரசாயனப் பசளையைக் குறிப்பிடுக.

..........................................................................................

c. உயிர்ப் பசளையாக வயல்களில் வளர்க்கக்கூடிய பன்னத் தாவரமொன்றைக் குறிப்பிடுக.

..........................................................................................

(v) வீதிவிளக்கு பொருத்தப்பட்ட மின்கம்பமொன்றுக்கு அருகில் காணப்பட்ட வயலில் செய்கை பண்ணப்பட்டிருந்த நெற்தாவரங்கள் பூப்பதற்கு அதிக காலம் எடுத்தது. கம்பத்தின் நிழல் பட்ட பகுதியில் காணப்பட்ட நெற் தாவரங்கள் விரைவில் பூத்தன. இதற்கான காரணத்தை விளக்குக.

..........................................................................................

**02.** (A) குறிப்பிட்ட பிரதேசமொன்றில் அமைந்துள்ள தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக அப்பிரதேச நிலக்கீழ் நீர் அசுத்தமடைந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

(i) குடிநீரில் காணப்பட வேண்டிய இயல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

a. ........................................ b. ........................................

(ii) இரசாயனப் பதார்த்தங்கள் நிலக்கீழ் நீருடன் சேரும் வழிமுறை யாது?

..........................................................................................

(iii) அப்பிரதேச கிணறுகளிலுள்ள நீரின் pH பெறுமானம் 4 எனக் கூறப்பட்டுள்ளது.

a. pH பெறுமானம் என்றால் என்ன?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

b. நீரின் pH பெறுமானத்தை மிகத் திருத்தமாக அளக்கும் விதத்தைக் குறிப்பிடுக.

..........................................................................................

(B) பின்வரும் சொற்களினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

a. ஊடுவடிதல் ..........................................................................................

..........................................................................................

b. கீழ்வடிதல் ..........................................................................................

..........................................................................................

c. கழுவியகற்றப்படல் ..........................................................................................

..........................................................................................

d. ஓடிவழிதல் ..........................................................................................

..........................................................................................

(C) பின்வரும் உபகரணங்களின் பிரதான பயன்பாட்டைக் குறிப்பிடுக.

a. குத்தூசி ..........................................................................................


b. ஒகர் ..........................................................................................

c. அமுக்கவடுகலன் ..........................................................................................

d. பேர்மான் புனல் ..........................................................................................

e. லக்ரோமானி ..........................................................................................

(D) அதிக மழை காரணமாக, விவசாயியொருவரின் காணி பின்வருமாறு பாதிக்கப்பட்டிருந்தது. கீழே தரப்பட்டுள்ளது. அவ்வாறு பாதிப்புக்குள்ளான தரையின் படமாகும்.



[பக். 4 ஐப் பார்க்க.

(i) உருவில் காட்டப்பட்டுள்ள மண்ணரிப்பின் வகை யாது?

.......................................................................................................................................

(ii) மேற்குறிப்பிட்ட தரையைப் புனரமைக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாது?

.......................................................................................................................................

(iii) அவரது காணியில் மீண்டும் மண்ணரிப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் **இரண்டு** தருக.

1. .......................................................................................................................................
2. .......................................................................................................................................

(iv) மண்ணரிப்புக் காரணமாக பயிர்செய் நிலங்களில் ஏற்படும் பிரச்சினைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

1. .......................................................................................................................................
2. .......................................................................................................................................

(E) விவசாயியொருவர் தனது வயலுக்கு களைநாசினியை விசிறும் விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.



(i) களைநாசினியை விசிறுவதற்கென அவரால் பயன்படுத்தப்படும் உபகரணம் யாது?

.......................................................................................................................................

(ii) அவரால் வயலுக்கு விசிறப்படுவது சர்வ களைநாசினி / தெரிவுக் களைநாசினி ஆகும்.

(iii) சர்வ களைநாசினி, தெரிவுக் களைநாசினி ஆகியவற்றுக்கு ஒவ்வொரு உதாரணத்தைக் குறிப்பிடுக.

சர்வ களைநாசினி ..........................................................................................................

தெரிவுக் களைநாசினி ..........................................................................................................

(iv) இந்த விவசாயியினால் களைநாசினி விசிறப்படும் முறையை ஏற்றுக்கொள்ளவியலாது. இதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

**03.** (A) நெல் விளைச்சலில் நைதரசன் பசளைகளின் செல்வாக்கினை அறிவதற்கான பரிசோதனையின் பெறுபேறு கீழே காட்டப்பட்டுள்ளது. பசளை ஒரு கிலோ 80.00 ரூபா எனவும் ஒரு கிலோ நெல்லின் விலை 40.00 ரூபா எனவும் கொள்க.

(i) ஒவ்வொரு மட்டத்திலும் எல்லை உற்பத்தியை அட்டவணையில் குறிப்பிடுக.

(ii) எல்லை வருமானத்தைக் கணித்து அட்டவணையின் நிரலைப் பூர்த்தி செய்க.

(iii) எல்லைச் செலவை உரிய நிரலில் எழுதுக.

| இடப்பட்ட யூரியாவின் அளவு (kg) | விளைச்சல் (kg) | எல்லை உற்பத்தி (MP) | எல்லை வருமானம் (MR) | எல்லைச் செலவு (MC) |
|---|---|---|---|---|
| 0 | 0 | .......................... | .......................... | .......................... |
| 1 | 3 | .......................... | .......................... | .......................... |
| 2 | 8 | .......................... | .......................... | .......................... |
| 3 | 12 | .......................... | .......................... | .......................... |
| 4 | 15 | .......................... | .......................... | .......................... |
| 5 | 17 | .......................... | .......................... | .......................... |
| 6 | 16 | .......................... | .......................... | .......................... |
| 7 | 13 | .......................... | .......................... | .......................... |

(iv) அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உள்ளீடு, வெளியீடு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைப் பின்வரும் வரைபில் காட்டுக.



(v) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியை வரையறுக்க.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(vi) உத்தம (சிறப்பு) உள்ளீட்டுச் சந்தர்ப்பத்தைக் காட்டுக.

..........................................................................................................................................

(B) இலங்கையில் விவசாய அறிவை விரிவாக்குதல் மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பபோருக்கு அறிவுரை மற்றும் உதவிகளை வழங்குதல் ஆகியவற்றுக்கென பல்வேறு வகைப்பட்ட அரச, தனியார் நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன.

(i) இலங்கையில் விவசாய பீடங்களைக் கொண்டுள்ள பல்கலைக்கழகங்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

a ............................................................ b ............................................................

c ............................................................ d ............................................................

(ii) விவசாய நடவடிக்கைகளுக்கு உதவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

a ..........................................................................................................................

b ..........................................................................................................................

c ..........................................................................................................................

(iii) இலங்கையின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான சவால்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

a ..........................................................................................................................

b ..........................................................................................................................

(C) விவசாயியொருவர் உலர் வலயத்தில் அமைந்துள்ள ஒரு ஹெக்டெயர் மிளகாய்ச் செய்கைக்கு நீர்ப்பாசனம் செய்ய தூவல் நீர்ப்பாசனத் தொகுதியை நிறுவ உத்தேசித்துள்ளார்.

(i) தூவல் நீர்ப்பாசனத் தொகுதியை நிறுவும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

a ..........................................................................................................................

b ..........................................................................................................................

(ii) தூவல் நீர்ப்பாசனத் தொகுதியின் அடிப்படைக் கூறுகள் **நான்கைக்** குறிப்பிடுக.

a ..........................................................................................................................

b ..........................................................................................................................

c ..........................................................................................................................

d ..........................................................................................................................

(iii) ஒரு தூவற்தலை (sprinkler head) 28 $m^2$ பரப்பளவுக்கு நீரைத் தெளிக்குமெனின் தூவற் தலைகளைப் பொருத்த வேண்டிய இடைத்தூரத்தைக் கணிக்க.

..........................................................................................................................................

..........................................................................................................................................


..........................................................................................................................................

..........................................................................................................................................

[பக். 6 ஐப் பார்க்க.

**04.** (A) தொடர்ச்சியான பாலுற்பத்தியைப் பெறுவதற்கு வருடத்துக்கு ஒரு கன்று ஈனத்தக்கதாக திட்டமிடப்பட வேண்டும்.

(i) கீழேயுள்ள வரைபில் பசுவொன்றின் கர்ப்பகாலம், கறவைக்காலம், வற்றுக்காலம் ஆகியன காட்டப்பட்டுள்ளன.




a. பசுக்களை பால் வற்றச் செய்தல் என்றால் என்ன?

.......................................................................................................................................

.......................................................................................................................................

b. பசுவின் கர்ப்ப காலம், கறவைக் காலம், வற்றுக் காலம் ஆகியவற்றை நாட்களில் தருக.

1. கர்ப்ப காலம் .......................................................................................

2. கறவைக் காலம் .......................................................................................

3. வற்றுக் காலம் .......................................................................................

c. பசுக்களை பால் வற்றச் செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

1. .......................................................................................................................................

2. .......................................................................................................................................

d. பசுக்களுக்கு ஏற்படும் மடியழற்சி நோயைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.


1. .......................................................................................................................................

2. .......................................................................................................................................

(ii) ஆண்டுக்கொரு தடவை மாட்டுக்கன்றைப் பெறுவதற்கெனக் கைக்கொள்ள வேண்டிய நவீன தொழினுட்ப முறையொன்றைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

(B) கீழே தரப்பட்டுள்ளது, பண்ணை விலங்கு உற்பத்தியிபோது பயன்படுத்தப்படும் இனவிருத்தி வேலைத்திட்டமாகும்.




(i) இந்த இனவிருத்தி முறையைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

(ii) பண்ணை விலங்கு உற்பத்தியில் இந்த இனவிருத்தி முறை பயன்படுத்தப்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

(iii) பண்ணை விலங்குகளை இனவிருத்தி செய்யும்போது விலங்கு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய பண்ணை அறிக்கை வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

1. .......................................................................................................................................

2. .......................................................................................................................................

[பக். 7 ஐப் பார்க்க.

(C) இலங்கையில் புரதத் தேவையை ஈடுசெய்வதற்கு புரொயிலர்க் கோழி இறைச்சி உற்பத்தி முக்கியமானதாக அமைகின்றது.

(i) புரொயிலர்க் கோழி இறைச்சியைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியொன்றைக் குறிப்பிடுக.

..............................................................................................................................................................

(ii) உங்களால் குறிப்பிடப்பட்ட உற்பத்தியை நற்காப்புச் செய்வதற்கெனப் பயன்படுத்தத்தக்க இரசாயனப் பதார்த்தமொன்றைக் குறிப்பிடுக.

..............................................................................................................................................................

(iii) உங்களால் குறிப்படப்பட்ட உற்பத்திப் பொருளை பொதிசெய்வதற்குப் பயன்படுத்தத்தக்க பொதியிடும் பதார்த்தமொன்றைக் குறிப்பிடுக.

..............................................................................................................................................................

(iv) உணவுப்பொதியின் பெயர்ச்சுட்டியில் (லேபல்) அடங்கியிருக்கவேண்டிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

a ..........................................................................................................................................................

b ..........................................................................................................................................................

(D) வருடம் முழுவதும் தொடர்ச்சியாக மாடுகளுக்கு ஐதுத்தீனை வழங்குதல் விவசாயிகள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாகும். மேலதிக தீன் உலர்புல், குழிகாப்புத் தீன் ஆகியன தயாரிக்கப்பட்டு களஞ்சியப் படுத்தப்படும்.

(i) ஐதுத்தீன் என்றால் என்ன?

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

(ii) உலர் புல் தயாரிப்பின் கோட்பாடு யாது?

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

(iii) குழிகாப்புத் தீன் தயாரிப்பதை விட உலர்புல் தயாரிப்பதனால் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

1. .........................................................................................................................................................

2. .........................................................................................................................................................

(iv) கறவை மாடுகளில் ஐதுத்தீன் பிரதானமாக இரைப்பையில் எப் பகுதியில் சமிபாடடையும்?

..............................................................................................................................................................

(v) ஐதுத்தீன் சமிபாடு நடைபெறும்போது உருவாகும் ஆவிபறப்புள்ள கொழுப்பமிலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

1. ............................................................................ 2. ............................................................................

**

[பக். 8 ஐப் பார்க்க.

# க.பொ.த (உயர்தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

## விவசாய விஞ்ஞானம் II

### B பகுதி - கட்டுரை வகை வினாக்கள்

* **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவுக்கும் **15** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
* உரிய இடங்களில் பெயரிடப்பட்ட வரிபடங்களை வரைக.

**5.** (i) அண்மைக்காலத்தில் விவசாய அபிவிருத்திக்கென அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை விளக்குக.
(ii) கலப்புப் பயிர்ச்செய்கை மூலம் விவசாயிகளுக்குப் பொருளாதார ரீதியானதும் சூழலியல் ரீதியானதுமான அனுகூலங்கள் கிடைக்கும். இதனை உறுதிப்படுத்துவதற்கான விடயங்களைச் சமர்ப்பிக்குக.
(iii) காலநிலை மாறுபாடு காரணமாக சூழல் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றம், பயிர்ச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விவரிக்குக.

**6.** (i) மண்வாழ் பற்றீரியாக்களின் தொழிற்பாடுகளை விளக்குக.
(ii) பொருளொன்றுக்கு ISO சான்றிதழைப் பெறுவதனால் அதன் உற்பத்தி நிறுவனம் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்குக் கிடைக்கும் அனுகூலங்களை விளக்குக.
(iii) உயர்பாத்தி நாற்றுமேடையைத் தயாரித்து அதில் வித்துக்களை இடும்வரை மேற்கொள்ளும் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் விளக்குக.

**7.** (i) விவசாயியொருவர் தனது பயிர்ச்செய்கைக்கு பசளைகளை உரிய சந்தர்ப்பத்தில் உரிய அளவில் இட்டபோதும் விளைச்சலில் அதிகரிப்பு ஏற்படவில்லை. இதற்கு ஏதுவான காரணங்களை விளக்குக.
(ii) விவசாயச் சந்தைப்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகளை விளக்குக.
(iii) மாமரத்திலிருந்து கிடைக்கும் விளைச்சலில் இழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு அவற்றைத் தவிர்ப்பதற்கான முறைகளை விளக்குக.

**8.** (i) இலங்கையின் மழைவீழ்ச்சிப் பொறிமுறையை விவரிக்க.
(ii) வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் விலங்குப் பீடைகளை, பொருளாதாரச் சேத மட்டத்திலும் குறைவாகப் பேணுவதற்கு பொருத்தமான சூழல் நேயக் கட்டுப்பாட்டு உத்திகளை விவரிக்க.
(iii) மண் புனரமைப்புக்கென கைக்கொள்ளத்தக்க சரியான விவசாய நடைமுறைகளை விவரிக்க.

**9.** (i) நீர்வடிப்புக் குறைவு காரணமாக பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் நேரடி, மறைமுக விளைவுகளை விவரிக்க.
(ii) பசுவின் பால் சுரப்புத் தொகுதியின் தொழிற்பாட்டில் ஓமோன்களின் செல்வாக்கை விளக்குக.
(iii) களைநாசினிகளை வகைப்படுத்தி அவற்றை வகைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விளக்குக.

**10.** (i) பயிர்செய் நிலத்தின் நீர்ப்பாசன வினைத்திறனை அதிகரிக்க மேற்கொள்ளத் தக்க நடவடிக்கைகளை விளக்குக.
(ii) கோழி வளர்ப்பு முறைகளை விவரிக்க.
(iii) இலங்கையில் பரம்பரையலகு வளங்கள் அழிவடைவதற்கான காரணங்களை விவரித்து பரம்பரையலகுக் காப்புக்கென மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை எழுதுக.

***